வென்றவேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
Wentworthville Tamil Study Centre Inc
info@wtsc.org.au
www.wtsc.org.au

# பேச்சுப் போட்டி - 2024

## ஆண்டு 4

**(போட்டி நடைபெறும் நாள் 11/05/2024)**

அனைவருக்கும் வணக்கம்.

**தைப்பொங்கல்**.

தை முதலாம் திகதி தமிழர்களால் தைப்பொங்கல் கொண்டாடப்படும். இதை உழவர் திருநாள் என்றும் அழைப்பர். அன்று உணவுப் பயிர்கள் வளர்வதற்கு உதவிய சூரியனுக்கு நன்றி செலுத்துவர்.

தைப்பொங்கல் அன்று நாங்கள் அதிகாலையில் எழுவோம். சூரியன் உதிக்கும் முன் முற்றத்தில் கோலம் போடுவோம். நிறைகுடம், குத்துவிளக்கு வைப்போம். கரும்பு, மாவிலை தோரணம் கொண்டு அலங்கரிப்போம். கோலத்தின் நடுவில் அடுப்பு வைத்துப் பொங்கல் பொங்குவோம். பொங்கலைச் சூரியனுக்குப் படைத்து நன்றி கூறுவோம்.

உறவினர்களுக்கு வாழ்த்துக் கூறி பொங்கலைப் பகிர்ந்து உண்போம். பட்டாசு வெடித்து மகிழ்வோம்.

தைப்பொங்கல் உலகம் முழுவதிலும் வாழும் அனைத்துத் தமிழர்களாலும் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

நன்றி. வணக்கம்.